வன்னிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் அந்த அறக்கட்டளையை நல்ல முறையில் 100 ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அந்த அறக்கட்டளை வன்னிய மக்களுக்காகவே ஏற்பாடு செய்யப்பட வேண்டியது. எனவே அதில் நான்கு பேரை, நிறைந்த அனுபவம் உள்ளவர்களை, நல்ல திறமைசாலிகளை, அறக்கட்டளை உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும். 100 வருஷங்களுக்கு முன்னால் இந்த அறக்கட்டளையைப் பொறுத்த வரையில் இன்னின்ன காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த அறக்கட்டளையைச் சேர்ந்த மற்ற அறக்கட்டளைகளைப் பொறுத்த வரையில் எல்லாம் நீங்கள் படித்துப் பார்ப்பீர்களேயானால் ஒரு அறக்கட்டளைகூட கல்வி நிறுவனத்திற்காக, தொழில் நிறுவனத்திற்காக, விதவைகளுக்காக, கண்பார்வையற்றவர்களுக்காக, வைத்தியசாலை அமைப்பதற்காக என்று குறிப்பிடப்படவில்லை. மற்ற அறக்கட்டளைகள் அத்தனையும் கோயில்களுக்கு விளக்குப் போடுவது, சாமிகளுக்கு மாலை போடுவது, அன்ன சத்திரங்களுக்கு ஏற்பாடு செய்வது என்ற இது போன்ற நியதிகள் இருக்கின்றன. அதைத் தொடர்ந்துதான் செங்கல்வராயன் அறக்கட்டளையையும் தனியாகப் பிரிக்க வேண்டும் என்பது குறித்து நீதிமன்றத்திற்கு வழக்கு சென்றது. நீதிமன்றம் நன்றாக விசாரித்து இதை ஒன்றாக இணைக்கக் கூடாது, தனியாகத்தான் இருக்க வேண்டும் என்று சொன்னது.

12–25 மணி

அரசாங்கம் எதற்காக உயர்நீதிமன்றத்திற்குப் போனது. அதை ஏன் வித்ட்ரா செய்யக்கூடாது? அதிலே அரசாங்கத்திற்கு என்ன சங்கடம்? நாம் மிகவும் பெருமையாகப் பேசுகிறோம், நாங்கள் அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்றெல்லாம் பேசுகிறோம். அப்படிச் சொல்கிறபோது இந்தச் சமயத்திலாவது நீங்கள் செய்யவில்லை என்று சொன்னால் வேறு யார் செய்ய இருக்கிறார்கள்? நீங்கள் சொல்கிற காரணம் என்னவென்றால் இந்த இரண்டு அறக்கட்டளைகளில்தான் பணம் வருகிறது. மற்ற அறக்கட்டளைகளில் பணம் வரவில்லை. அதனால்தான், நாங்கள் எல்லாவற்றையும் மொத்தமாக வைத்துக் கொள்கிறோம் என்று கூறுகிறீர்கள். மற்ற அறக்கட்டளையில் வரவில்லை என்றால் அந்த அறக்கட்டளையை ஏற்பாடு செய்த வாரிசுகள் இருக்கிறார்கள். அவர்களைக் கேளுங்கள். யாரும் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால், இந்த அரசு, எத்தனையோ காரியங்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறது, ஒரு கோடி, 2 கோடி அந்த அறக்கட்டளைக்குச் செலவு செய்து அதைத் தனியாக வைத்து நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. இதைக் கட்டாயம் செய்ய வேண்டும். ஓராண்டு, இரண்டாண்டு என்று தள்ளிப் போடுவதில் உள்நோக்கம் இருந்தால் வேறு பிரச்சினை எழுந்து அரசாங்கம் அதைச் சந்திக்க வேண்டும் என்ற நிலையோடு என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த பச்சையப்பன் அறக் கட்டளையை 1980 ஆம் ஆண்டு அரசினுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்த நேரத்தில் அங்கே பலவேறு தவறுகள் இருந்தன என்ற காரணத்தினால், அன்றைக்கு நிர்வாகத்திலே இருந்தவர்கள், குறைந்த வாடகை, நீண்ட காலக் குத்தகை, தகுதி பெறாத ஊழியர்களுக்கு பதவி உயர்வு, தகுதியற்ற ஊழியர்கள் நியமனம், தாறுமாறான நிர்வாகம், பலன் அளிக்காத தன்மை கள், யூ.சி.ஜி. மானியம் போன்றவைகள் பெற முடியாத நிலைமை இப்படிப் பல்வேறு தவறுகளை அவர்கள் செய்தார்கள். அதனால் அரசாங்கம் 2 ஆண்டு காலத்திற்கு தன்னுடைய பொறுப்பிலே எடுத்துக் கொண்டது. ஆனால் காலப் போக்கிலே நீடிப்பு செய்து கொண்டே வந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இன் றைக்கு நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்பு வதெல்லாம் அரசாங்கம் இதற்கு முன்பு தன்னுடைய பொறுப் பிலே எடுத்துக் கொண்ட சமயத்தில் இருந்த நிலைமைகள் என்ன? பிறகு அரசாங்க அதிகாரிகள் பொறுப்பிலே இருக்கின்ற சூழ் நிலையிலே அதிலே என்னென்ன மாற்றங்கள் வந்திருக்கின்றன, என்னென்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை எல்லாம் அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

இதற்கு முன்புகூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இன்றைக்கு பொதுப்பணித் துறை அமைச்சராக இருக் கின்ற மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் அன்றைக்கு எதிர்க் கட்சியிலே இருக்கும்போது சொன்னார்கள். 'நீங்கள் 2 ஆண்டுக் காலத்திற்கு அதை அரசினுடைய பொறுப்பிலே எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக் கின்றீர்கள், ஆனால் காலப் போக்கிலே இதை நீடித்துக்கொண்டே சென்றால் அது தவறு' என்று வாதித்து இருக்கிறார்கள். அன் றைக்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் 'அரசாங்கம் இதை மேலும் கால நீடிப்புச் செய்வது தவறு' என்று சொல்லியிருக்கிறார்கள்.

நான் அறிந்து கொள்ள விரும்புவதெல்லாம் இன்றைக்குள்ள சூழ்நிலையில், இன்றைக்கு வழக்கு மன்றத்திலே வழக்கானது நிலுவையிலே இருக்கின்றது. நாங்கள் மேனேஜ்மெண்டை மாற்று வதற்காக, அந்த ஸ்கீமிலே சொல்லி மாற்றங்களைச் செய் வதற்காக ஹைக்கோர்ட்டிலே வழக்குப் போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஓராண்டு காலத்திற்கு நீடிப்புத் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்கானது ஓராண்டு காலத்தில் முடிந்துவிடுமா? இன்னும் 5, 6 ஆண்டுகள் ஆகும். ஏன் அதை மறைத்து ஓராண்டு காலத்திற்கு மட்டும்தான் நீடிப்பு என்று கேட்கிறீர்கள். தேவை என்று சொன்னால் 5 ஆண்டு காலத் திற்கு என்று சொல்லுங்கள். இல்லை என்று சொன்னால் உடனடி யாகத் தேர்தல் நடத்துங்கள். நான் திருத்தங்கள் கொடுத்திருக்